**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 19.02.2026</u>**

**MCOP.47/2024**

**ம.சா.1 திருமதி.சிவமணி**

**ம.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. கோட்டப்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது யார் என்றால் நான்தான் கொடுத்தேன். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் விபத்தை நேரில் பார்க்காததால் ஏற்கனவே நிறுத்தப்பட்டிருந்த பேருந்தா அல்லது எனது பிரமாண வாக்குமூலத்தில் சொன்னதுபோல பேருந்து தாறுமாறாக சென்று திடீரென நின்றதா என்பது குறித்து எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். விபத்து சம்பந்தமாக எனக்கு தகவல் சொன்னது யார் என்றால் யார் என்று எனக்கு தெரியவில்லை, விபத்து நடந்த இடத்தில் இருந்து யாரோ எனக்கு போன்செய்து சொன்னார்கள். மாம்பாடி கிராமத்தை சேர்ந்த புஷ்பலிங்கம் என்பவர்தான் எனக்கு விபத்து குறித்து தகவல் சொன்னதாக போலிசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. மாம்பாடி கிராமத்தை சேர்ந்த புஷ்பலிங்கம் என்பவர் ஏற்கனவே நின்றுகொண்டிருந்த பேருந்து செல்கிறது என்று நினைத்துக்கொண்டு எனது கணவர் சிதம்பரம் அவராகவே பேருந்தின் பின்பகுதியில் மோதி அவராகவே விபத்தை ஏற்படுத்திக்கொண்டதாக என்னிடம் சொன்னார் என்று நான் போலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால்

நான் அவ்வாறு சொல்லவில்லை. உண்மையை சொன்னால் இழப்பீடு கிடைக்காது என்பதற்காக காவல்துறையில் நான் சொன்ன வாக்குமூலத்தை மறைத்து பொய்யான சங்கதிகளை தற்போது எனது முதல் விசாரணையிலும், மனுவிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

2. எனது கணவர் தலையில் அடிபட்டுதான் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் விபத்தின்போது தலைகவசம் அணிந்திருந்தால் எனது கணவர் உயிர் தப்பியிருக்க வாய்ப்பு உள்ளது என்று சொன்னால் எனது கணவர் விபத்தின்போது தலைக்கவசம் அணிந்திருந்தார். எனது கணவர் ஓட்டிச்சென்ற வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எனது கணவர் ஓட்டிசென்ற வாகனம் எனது கணவருடையதா என்றால் அவருடையது தான். எனது கணவருக்கு விபத்து சமயத்தில் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. விபத்தானது முழுக்க முழுக்க எனது கணவரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் ஏற்பட்டது இந்த விபத்துக்கு பேருந்து ஓட்டுனர் எந்த விதத்திலும் பொறுப்பல்ல என்றால் சரியல்ல. ஏற்கனவே நிறுத்திவைக்கப்பட்டிருந்த பேருந்தின்மீது மோதி எனது கணவர் விபத்தை ஏற்படுத்தியால் பேருந்தின் காப்பீட்டாளர் எந்தவித இழப்பீடும் எங்களுக்கு கொடுக்க கடமைப்பட்டவ்ர் அல்ல என்றால் சரியல்ல. எனது கணவர் விபத்துக்கு முன்பு எந்த வேலையும் இல்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல, அவர் கட்டிட மேஸ்திரி வேலை பார்த்துக்கொண்டிருந்தார் அவர் மட்டுமே எங்கள் வீட்டில் சம்பாதிக்கக் கூடிய நபர். எனது கணவர்

கட்டிட மேஸ்திரி வேலை பார்த்திருந்தால் தொழில் சங்கத்தில் இருந்து கட்டுமான தொழிலாளர் அடையாள அட்டை வழங்கப்பட்டிருக்கும் என்றால் அப்படி எதுவும் வழங்கப்படவில்லை. விபத்துக்கு முன்பு எனது கணவருக்கு எந்த வேலையும் இல்லை, எந்த வருமானமும் இல்லை என்றால் சரியல்ல. எனது கணவருக்கு ஏதாவது இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் எனது கணவர் ஓட்டிசென்ற வாகனத்தின் காப்பீட்டாளரான 4ம் எதிர்மனுதாரர் மட்டுமே இழப்பீட்டை கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனது கணவர் TN29BT4093 என்ற இருசக்கர வாகன்ததில்தான் சென்றார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்திற்கு காப்பீடு இருந்தது என்றால் சரிதான். எனது கணவருக்கு விபத்து சமயத்தில் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுனர் உரிமம் இருந்தா என்றால் அது எனக்கு தெரியவில்லை. எனது கணவர் இருசக்கர வாகனத்தில் சொல்லும்போது தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல, அணிந்திருந்தார். கோட்டப்பட்டி காவல் துறையினர் TN87C6499 என்ற பேருந்தின் மீதுதான் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். விபத்து எங்கு நடந்தது என்றால் பொய்யம்பட்டி – தீர்த்தலை செல்லும் சாலையில் பெரியகுளம் என்ற இடத்தில் நடந்தது. விபத்து ஏற்படுத்திய TN87C6499 என்ற பேருந்து எனது கணவர்

ஓட்டிசென்ற வண்டிக்கு முன்னால் சென்றது என்றால் சரிதான். அந்த பேருந்து எந்த வித முன்எச்சரிக்கை செய்யாமல் திடீரென நின்றதால் எனது கணவர் அந்த பேருந்தின் பின்னால் சென்று இருசக்கர வாகனத்தை மோதி விட்டார் என்றால் சரிதான். அந்த விபத்துக்கு காரணம் பேருந்து ஓட்டுனர் என்றால் சரிதான். அதனால் எங்களுக்கு ஏதாவது இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் அந்த பேருந்தின் ஓட்டுனர், அதன் உரிமையாளர் மற்றும் அதன் காப்பீட்டாளர்தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரிதான். 4ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்தமனு தள்ளுபடிசெய்யக்கூடியது என்றால் சரிதான்.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.19 17:35:36 +0530